அப்பா அப்பா ஆசை அப்பா என்னை தவிக்க விட்டு சென்றாய் அப்பா
அப்பா அப்பா பருதி அப்பா  என்னை பிரிந்து விட்டு போனாய் அப்பா

எம் நாடு அழுகின்ற கண்ணீர் சத்தம்
உன் காதில் தினமும் கேட்கிறதா
எம்மோடு வருகின்ற மண்ணின் பந்தம்
உன் வாழ்வு சொல்லுமே புரிகிறதா
தந்தை வரவேண்டும்
தாவி தொட வேண்டும்
அன்பு தோள் மீது சாய்ந்தால் போதும்
அப்பா வரவேண்டும்
முத்தம் பெறவேண்டும்
எங்கள் நாட்டுக்கு சென்றால் போதும்

பாசம் காட்டி வீரம் கொடுத்தாய் உன்னை மறவேன் அப்பா
தேசம் வாழ உன்னை கொடுத்தாய்
பருதி எந்தன் அப்பா

உலகினில் பிறந்த உயிர்களுக்கும் வாழ்ந்து சாக நாடு இருக்கு
ஈழத்தில் பிறந்த எங்களுக்கு  வாழ எங்கே நாடு இருக்கு

தொட்டால் தாலாட்டும் உன் பாச மடி எங்கே
பட்டாம்பச்சி போல் உனைதேடி போறன்
கொஞ்சி விழையாடும் என் அப்பா நீ எங்கே
உயிரே இல்லாத பொம்மை போல் ஆனேன்

அப்பா அப்பா ஆசை அப்பா
என்னை தவிக்க விட்டு சென்றாய் அப்பா
அப்பா அப்பா பருதி அப்பா
என்னை பிரிந்து விட்டு போனாய் அப்பா

பேசிப் பழக தேசம் வளர்க  தமிழை தந்தாய் அப்பா
ஈழ உணர்வை நானும் படிக்க ஆறிவை தந்தாய் அப்பா
கூவி திரியும் குயில்களுக்கு  காட்டு மரங்களில் கூடு இருக்கு
நாட்டை இழந்த எங்களுக்கு வாழ எங்கே வீடு இருக்கு
நிலவை நீ காட்டி கதை சொன்ன நாள் எங்கே
அப்பா உன்னை தேடி நான் எங்கு போவேன்
அழுது நான் பாடும் காற்றுக்கு கேட்காதா
அப்பா உன்னை தேடி நான் எங்கு போவேன்

அப்பா அப்பா ஆசை அப்பா